கூட்ட எண் 06
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 25.07.2018.

**2018-ம் ஆண்டு ஜீலை மாதம் 25.07.2018 ந் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1. இந் நகராட்சி ஆணையர் பொறுப்பு அவர்களின் ஜீன் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கம் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3 ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள வெங்கட்ராமன் பூங்கா, ஜெயலட்சுமி நகர் பூங்கா மற்றும் வி.ஏ.கே. நகர் பூங்கா ஆகிய மூன்று இடங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்திட அமைக்கப்பட்டுள்ள ஆறு எண்ணிக்கை தொட்டிகளுக்கு இரும்பு தகட்டிலான மேற்கூறை அமைத்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி பணியினி அவசர அவசயிம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு .பி. சந்திரசேகர் வசம் ஒப்படைத்ததை மன்றம் ஏற்கலாம். மேற்கண்ட பணிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் உபயோகிப்பாளர் கட்டணத்திலிருந்து வழங்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

4. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 13277/2018/WS1 நாள் 03.07.2018ல் ஆரணி நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் 7427 எண்ணிக்கை வழங்கவும், அதற்கான மதிப்பீட ரூ. 250.00 இலட்சத்திற்கு TUFIDCO நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று பணியினை மேற்கொள்ள தெரிவித்து வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு மதிப்பீடு ரூ.250.00 இலட்சத்திற்கு TUFIDCO நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 139/2018/இ1)

5. ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள எருகிடங்கில் தினசரி சேகரமாகும் குப்பைகள் கொட்டிவருவதால், வழிமுழுவதும் மலைபோல் குவிந்துள்ளது. எனவே மேற்படி குப்பை மேடுகளை டோசர் மூலம் சமன் செய்து குப்பைகள் கொட்ட வேண்டியுள்ளதால், உதவி செயற்பொறியாளர் (பொ) வேலாண்மை பொறியியல் துறை ஆரணி அவர்களிடத்தில் மதிப்பீடு கோரப்பட்டதில், 1மணி நேரத்திற்கு ரூ.840/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இடத்தினை அவ்வப்போது சமன் செய்திட 100மணி நேரத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 84000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உதவி செயற்பொறியாளர் (பொ) வேலாண்மை பொறியியல் துறை ஆரணி அவர்கள் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

6. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆரணி நகர சர்வே வார்டு - சி, பிளாக் - 4, நகரளவு எண் 41, பரப்பளவு 26 சென்ட் (பழைய விலாசம் 59, மார்கெட் ரோடு, ஆரணி உள்ள இடத்தின் மீது ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 27/2001 ஆக தாக்கல் செய்யப்பட்டு, பிறகு செய்யார் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 228 /2005 -ல் வழக்கு நடந்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதி மன்ற அசல் வழக்கு எண் 228 / 2005 -ன் தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையின் மீதும் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யவும், மேற்படி மேல் முறையீடு மனுவுடன் செக்ஷன் 5 லிமிடேசன் ஆக்ட் மனுவினை தாக்கல் செய்யவும், நீதி மன்ற செலவுகள் மற்றும் ஆரம்ப கட்ட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/- வழங்குமாறு திரு- ஆர். மணிவண்ணன் Addl, Public Prosecutor Cum Addl, Govt, Pleader, செய்யாறு அவர்கள் கோரியுள்ளார். எனவே, அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம். 2. நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், முன்அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 885/எப்102018)

7. ஆரணி நகர மன்றத் தீர்மான எண் 27 நாள் 17.05.2018-இல் நகராட்சிக்கு சொந்தமான 1.82 ஏக்கர் எருகிடங்கில் பல வருடங்களாக சேகரமாகியுள்ள மரபுவழி கழிவுகளை தாதுப் பொருட்களாக (Bio Mining) மாற்றும் முறையில் தீர்வு செய்திடவும், 1.82 ஏக்கர் நிலப்பரப்பினை மீண்டும் உபயோகத்திற்கு கொண்டு வரவும், ரூ. 110.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி சமர்ப்பிக்கப்பட்டதற்கு, பணிக்கான மதிப்பீடு தொகை ரூ. 110.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கி அதில் இப்பணியினை ஏற்கனவே ஒதுக்கியுள்ள ரூ. 103.80 இலட்சம் தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையினை நகராட்சி நிதியில் மேற்கொள்ள அனுமதித்து நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 29659/பி3/2016 நாள் 24.07.2018-இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் பேரில் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேலும், மதிப்பீடு ரூ. 110.00 இலட்சத்தில், ஏற்கனவே தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் இப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 103.80 இலட்சம் போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 999 / இ1/ 2016)

8. ஆரணி நகராட்சி காந்தி சாலையில் ஒரு தொகுதிக்கு (BLOCK) 24 கடைகள் வீதம் 6 தொகுதிகளில் 144 காய்கறி சந்தைக் கடைகள் IDSMT திட்டத்தின் கீழ் ரூ. 123.00 கோடி மதிப்பீட்டில், 1985 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. 01.06.2018 அன்று ஆரணியில் கனமழை பெய்த போது இந்த சந்தை வளாகக் கடைகளில் 3 கடைகளின் மேற்கூறை இடிந்து விழுந்தது. இதை தொடர்ந்து ஆரணி நகராட்சி பொறியாளர் காந்தி சாலை காய்கறி சந்தைக் கடைகளை ஆய்வு செய்ததில், இந்த வளாகத்தில் உள்ள 144 கடைகளும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன என தனது 20.06.2018 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆரணி நகராட்சி காந்தி சாலையில் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள காய்கறி சந்தை வளாகத்தில் உள்ள 144 கடைகளை இடித்து விட்டு புதியதாக 127 காய்கறி சந்தை வளாகக் கடைகள் ரூ. 2.37 கோடி மதிப்பீட்டில் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. கோடியில் |
|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி வார்டு எண் 31ல் உள்ள கோட்டை கிழக்கு தெருவில் வெங்கட்ராமன் பூங்காவின் பின்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 127 எண்ணிக்கையில் தினசரி காய்கறி சந்தை வளாகம் அமைத்தல் | ரூ. 2.37 |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ. 2.37 கோடி மதிப்பீடில் புதிய காய்கறி சந்தை வளாகத்தில் 127 கடைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1564/இ1/2018)

9. இந்நகராட்சியில் 2010-2011 மற்றும் 2011-2012 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ. 14,710/- தொகையை திரும்ப வழங்க கோரி திரு. எம்.பழனி ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட பிணை வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், மேலும், தணிக்கை எழுத்தர் குறிப்பில் திரு. எம். பழனி என்பவர் பெயரில் தணிக்கை தடை ஏதும் இல்லை என பரிந்துரை செய்துள்ளார். எனவே, மேற்படி தொகையை வழங்கலாம்.(கோப்பு எண் 2818/பி4/2018)

10. இந் நகராட்சியில் 2013-2014 முதல் 2016-2017 வரை பல்வேறு பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட பினை வைப்புத் தொகை ரூ. 12900/- திரும்ப வழங்க கோரி திருமதி. எஸ். உஷாராணி ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட பினை வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், மேலும், உதவி பொறியாளர் மேற்கண்ட பணிகள் நல்ல நிலையில் உள்ளதாக பரிந்துரை செய்துள்ளார். எனவே, மேற்படி, தொகையை வழங்கலாம். (கோப்பு எண் (பி4/2018)

11. இந்நகராட்சி சொத்துவரி சம்மந்தமாக உள்ள வழக்குகளுக்கு இந் நகர மன்ற வழக்கறிஞர் திரு. வி. வெங்கடேசன் B.Com LLM அவர்களுக்கு செலுத்த வேண்டிய வழக்கறிஞர் கட்டணம் தோராய செலவினம் ரூ. 50000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2243/அ1/2018)

12. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் கடித ந.க.எண் 2434/2018/அ7 நாள் 19.07.2018ல் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-2019 ஆண்டிற்கான பின்வரும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 23 இளங்கோ தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 2 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.50 |
| | **மொத்தம்** | **10.50** |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்படி பணி திட்டப் பணி என்பதால், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண் 1284/2018/இ1)

13. ஆரணி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்**<br><br>**வருவாய் நிதி** | **மதிப்பீடு ரூ. லட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் விவரம்**<br><br>**திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி கே. கே. நகர் விரிவு மற்றும் ஜெயம் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.85 | எஸ். உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.01% குறைவு<br>0.26% அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் அறை அமைத்தல் | 4.25 | எஸ். உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.02% குறைவு<br>1.30% அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேற்படி பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 1547/இ1/2017)

14. ஆரணி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள 546 சாலைகளின் மொத்த நீளம் 91.833 கி.மீ-ல் 31.777 கி.மீ தார்சாலையாகவும், 46.994 கி.மீ சிமெண்ட் சாலையாகவும், 0.629 கி.மீ ஜல்லை சாலையாகவும் 12.433 கி.மீ மண் சாலையாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ள குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் குடிநீர் பிரதான நீரேற்று குழாய்கள், மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட்டதின் காரணமாக சாலைகள் பெருமளவில் சேதமுற்றுள்ளது. மேலும், பெரும்பாலான தார்சாலைகள் அமைக்கப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டபடியாலும், ஆங்காங்கே சேதமுற்று போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதாலும், மேலும், இந்நகரில் அதிக அளவில் விஸ்தரிப்பு மனை பிரிவுகள் உருவாக்கத்தில் சாலைகள் மண் சாலைகளாகவே உள்ளதால், மனைப்பிரிவுகளில் வீடுகள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளதாலும்,சாலையினை மேம்படுத்த வேண்டியுள்ளது. மேற்கூறிய சாலைகளின் அடிப்படையில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தெருக்களில் போக்குவரத்தின் தன்மைக்கேற்றவாறு தார்சாலைகளாகவும், சிமெண்ட் சாலைகளாகவும், ஒருசில தெருக்களில் மழைநீர் வடிகால் வசதியுடன் மேம்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

சிப்பம் - 01

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 01 | வார்டு எண் 01 கே.சி.கே நகர், புதுகாமூர் சாலை மற்றும் விரிவு பகுதி, ஜெயம் நகர், கே.கே. நகர் விரிவு பகுதி, DRS நகர், ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், & வார்டு எண் 01 அன்னை சத்யா நகர், மற்றும் பழைய ஆற்காடு சாலை ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை அமைத்தல் | 249.00 |
| | | சிப்பம் - 02 | |
| 2 | 7,8,10,13,14,16 & 22 | வார்டு எண் 07 தணிகாசலம் தெரு முதல் சத்தியமூர்த்தி ரோடு (வாணுவ பிள்ளையார் கோயில் எதிர்புறம்) வார்டு எண் 08 பரசுராமன் தெரு, வார்டு எண் 10 நாராயணன் தெரு, வார்டு எண் 13 அருணகிரி சத்திரம் முதல் தச்சூர் சாலை வரை, வார்டு எண் 14 | 243.00 |

| | | | |
|---|---|---|---|
| | | வெங்கடேஷ்வரா நகர், மில்லர்ஸ் சாலை மற்றும் சபாஷ்கான் தெரு முதல் வெங்கடேஷ்வரா நகர் பின்புறம், வார்டு எண் 16 பழனி ஆண்டவர் கோயில் தெரு, வார்டு எண் 22 சாமி தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் | |
| சிப்பம் - 03 | | | |
| 3 | 20,23,24 & 25 | வார்டு எண் 23 இளங்கோ தெரு,வார்டு எண் 24 வி.எல்.டி நகர், வார்டு எண் 25 சோலை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், வார்டு எண் 20 சூரிய குளம் தெற்கு மற்றும் மேற்கு தெரு, வார்டு எண் 23 தச்சூர் சாலை முதல் நகராட்சி நீர்த் தேக்கத் தொட்டிக்கான அணுகு சாலை, வார்டு எண் 24 பாரதியார் தெரு, வார்டு எண் 25 நாயக்கன்பாளையம், மலையாம்பட்டு ரோடு ஆகிய தெருக்களுக்கு தார்சாலை அமைத்தல் | 181.00 |
| சிப்பம் - 04 | | | |
| 4 | 27 & 30 | வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், வார்டு எண் 27 முள்ளிப்பட்டு ரோடு, எம்.ஜி.ஆர். நகர் வார்டு எண் 29 நீதிபதி விஜயரங்கன் தெரு, பிச்சாண்டி நகர், அன்பு நகர் பின்புறம், வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் & ரகுநாதபுரம் ரோடு ஆகிய தெருக்களுக்கு தார்சாலை அமைத்தல் | 181.00 |
| சிப்பம் - 05 | | | |
| 5 | 9,26,27,28 & 32 | வார்டு எண் 27 EB பின்புறம், காமராஜர் நகர், அண்ணா நகர், வார்டு எண் 28 பள்ளிக்கூடத் தெரு விரிவு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல், வார்டு எண் 09 இந்திரா நகர், வார்டு எண் 26 நாடகசாலை பேட்டை தெரு பின்புறம் (சரஸ்வதி நகர்) வார்டு எண் 32 கோட்டை வடக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல், வார்டு எண் 32 கோட்டை மைதானத்தை சுற்றி உள்ள சாலையில் இருபுறங்களில் மற்றும் கோட்டை வடக்கு தெரு முதல் பழைய பேருந்து நிலையம் வரை உள்ள தெருவிற்கு மழைநிர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைத்தல், | 152.00 |
| | | மொத்தம் | 1006.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் உள்ளதில் 1.910 கி.மீ சாலை சிமெண்ட் சாலையாகவும்,1.440 கி.மீ சாலை பேவர் பிளாக் தளமாகவும், 14.900 கி.மீ சாலை தார்சாலையாகவும் மற்றும் 5.080 கி.மீ நிளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 1006.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :- மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு அரசிடமிருந்து IUDM திட்ட நிதியின் கீழ் மான்யமாக பெற்று மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வழங்க கோரி கருத்துரு அனுப்பவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண் 1113/இ1/2018)

15. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 10,05,2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம்<br><br>திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள 15 எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்குகள் பழுது பார்த்தல் பணி செய்தல் | 4.00 | M/s High-tech Tronics<br>Chennai - 600 033<br><br>M/s Sri Balaji Electricals<br>Chennai - 600 017 | 0.30% குறைவு<br><br>0.50%. அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி பிரதான சாலை காந்தி ரோடில் அமைந்துள்ள சென்டர் மீடியா மின்விளக்குகள் பழுது பார்த்தல் பணி செய்தல் | 1.00 | M/s High-tech Tronics<br>Chennai - 600 033<br><br>M/s Sri Balaji Electricals<br>Chennai - 600 017 | 0.30% குறைவு<br><br>0.50%. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேற்படி பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

16. ஆரணி நகராட்சி காந்தி ரோடில் இயங்கி வரும் காய்கறி வளாக கடைகள் மிகவும் சிதலமடைந்து இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளது. எனவே, அதனை அகற்றி விட்டு புதியதாக கட்ட உள்ளதால், ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி சமன் செய்து தர ஆகும் தோராய மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணியினி அவசரத்தை கருதி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1564/2018/இ1)

17. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஜெனரேட்டரின் பேட்டரி தற்போது பழுதாகியுள்ளதால், ஜெனரேட்டர் இயக்க முடியாமல் உள்ளது. மேலும், மேற்படி பேட்டரி பொருத்தி 3வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனவே, பழைய பேட்டரியை அகற்றி விட்டு புதியதாக பேட்டரி ஒன்று பொருத்த ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 11500/- மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், மேற்படி ஜெனரேட்டர் விநியோகம் செய்த நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்யவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

18. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN25AX6476 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 20.08.2018 அன்றுடன் வருடாந்திர இன்சூரன்ஸ் முடிவடைகிறது. இதனை 21.08.2018 முதல் 20.08.2019 வரை மீண்டும் ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள ரூ. 32,306/-யினை தி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ஆரணி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.. (கோப்பு எண் 761/2018/இ1)

19. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை அலுவலக கடிதம் ந.க.எண் 35/செமதொஅ/2018 நாள் 10.02.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, தமிழக அரசின் ஓராண்டு சாதனைகள் இந் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட குறித்து நகராட்சி சார்பாக தினபூமி தினசரி நாளிதழ் சாதனை மலரில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான செலவினம் தொகை ரூ.10500/- விளம்பர கட்டணம் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 587/இ1/2018)

20. வேலுார் மண்டலத்தில் உள்ள ஆரணி நகராட்சியில் வசிக்கும் **63263** எண்ணிக்கையிலான பொதுமக்களுக்கு நகராட்சி மூலம் நாள்தோறும் **54.00** இலட்சம் குடிநீர் இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வீதம், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு **84.87**லிட்டர் வீதம் குடிநீர் கீழ்க்கண்ட நீராதாரங்களிலிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

| வ எண் | நீராதார இருப்பிடம் | மேல்நிலைத் தொட்டி அமைவிடம் | மேல்நிலைத் தொட்டி கொள்ளவு | குடிநீர் விநியோகிக்கப்படும் தண்ணீர் மற்றும் கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஆரணி கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் | நகராட்சி அலுவலக வளாக நீர்த் தேக்கத் தொட்டி | 6.00 | இரண்டு தினங்களுக்கு ஒரு முறை 2.00 மணி நேரம் |
| 2 | தச்சூர் தலைமை நீரேற்று நிலையம் | நகராட்சி அலுவலக வளாக நீர்த் தேக்கத் தொட்டி | 5.00 | ,, |
| 3 | | நகராட்சி அலுவலக வளாக நீர்த் தேக்கத் தொட்டி | 3.00 | ,, |
| 4 | | கண்ணகி நகர் | 4.00 | ,, |
| 5 | | சைதாப்பேட்டை | 3.00 | ,, |
| 6 | | இராமகிருஷ்ணா பேட்டை | 1.00 | ,, |
| 7 | ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம் | புதுகாமூர் ரோடு | 2.60 | ,, |
| 8 | | களத்து மேட்டுத் தெரு | 7.40 | ,, |

மேலும், ஆரணி நகராட்சியில் மொத்தமுள்ள **15943** எண்ணிக்கையிலான சொத்து வரிவிதிப்பில் குடியிருப்பு முறையில் **11775** எண்ணிக்கையிலும், வணிக பயன்பாட்டில் **3973** எண்ணிக்கையிலும், தொழிற்சாலை முறையில் **324** எண்ணிக்கையிலும், சொத்துவரி விதிப்பு உள்ளது. இதில் **5706** குடியிருப்பு முறையிலும், **152** எண்ணிக்கையில் வணிக முறையிலும், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. நகரில் உள்ள அனைத்து இணைப்புகளுக்கான குடிநீர் விநியோகத்தினை Flow Control Valve மற்றும் அளவுமானி பொருத்தி Metering System-த்தின் அடிப்படையில் Uniform Water Supply Distribution செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள சொத்துவரி விதிப்புகளில் இதுவரை வழங்கப்பட்டுள்ள குழாய் இணைப்புகள் எண்ணிக்கை போக மீதமுள்ள **10085** சொத்துவரி விதிப்பில் **7427** எண்ணிக்கையில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ மூலம் வட்டியில்லா கடனாக ரூ. **250.00** இலட்சம் நிதி பெற்று பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை– அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண் **13277/2018/**குவ**1** நாள்**03.07.2018**ல் நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. இந்நிலையில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர்,

சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண். 13277/2017/குவ1, நாள்: 09.07.2018 தேதிய கடிதத்தில் 29.06.2018 ஆம் தேதியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு 24 x 7 அடிப்படையில் சீரான குடிநீர் விநியோகம் உரிய அழுத்தத்தில் கடைமடைப் பகுதியில் உள்ளவர்களுக்கு கிடைத்திடும்படி நீராதாரங்களையும் குடிநீர் விநியோக அமைப்புகளையும் District Metering Area (D M A) –ன்படி செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அறிவுரைக்கிணங்க, District Metering Area-ன்படி குடிநீர் விநியோகத்தினை ஆரணி நகராட்சியில் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. ஏற்கனவே, TWIC கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரி திட்ட அறிக்கையுடன் தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி அமைத்து District Metering Area-ன் படி குடிநீர் விநியோகத்தினை நடைமுறைப்படுத்த தனியார் கலந்தாலோசகரை உரிய வழகாட்டுதலின்படி நியமித்து TNUIFSL நிதி நிறுவன Project Development Grant Fund (PDGF) or Project Preparatory Fund (PPF) மூலம் நிதி ஒதுக்கீடு பெற்று Zonation activities பணிகளை இந்நகராட்சியில் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 139/இ1/2018)

21 **ஆரணி நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்கள் பூங்காக்கள் மற்றும் சுடுகாடு முதலிய இடங்களை தெரிவு செய்து** Micro Composting **முறையில் அறிவியல் ரீதியாக அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ள** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை - 5 அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண் 29659/ப்பி3/2016 நாள் 23.03.2018ல் **திருத்திய நிர்வாக அனுமதி வழக்கப்பட்டதின் பேரில் பின்வரும் இடங்களில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு**, **பணி நடைமுறைபடுத்தப்படும்போது ஜெயலட்சுமி நகர்**, **கண்ணப்பன் நகர்**, **பாலாஜி நகர் ஆகிய இடங்களில் உள்ள பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் அவ்விடங்களுக்கு பதிலாக கீழ்கண்ட விவரப்படி பணிகள் இடம் மாற்றி செய்ய வேண்டியுள்ளது**.

| **வ.எண்** | **பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடம்** | **பணிகள் மாற்றம் செய்ய வேண்டிய இடம்** |
|---|---|---|
| 1 | **கண்ணப்பன் நகர்** (**சபாஷ்கான் தெரு**) | **நகராட்சிக்கு சொந்தமான மாடு அடிக்கும் வளாகம்** |
| 2 | **பாலாஜி நகர்** | **கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம்** |
| 3 | **ஜெயலட்சுமி நகர்** | **நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடை வளாகம்** |

எனவே, மேற்படி பணிகளை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனமதி அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் இடம் மாற்றி செய்வதற்கு திருந்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர் 12 அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதி அளிக்காலம். (கோப்பு எண் 999 /2016/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.